தேதி.10.02.2026

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S. No.10/2020 திரு.பழனிச்சாமி, த/பெ.ராமணகவுண்டர் வா.சா.1

வா.சா.1: மனுவின் பேரில் மனுமதிக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

தற்போது என்னுடைய வயது என்னவென்றால் 88 வயதாகும். எனது மனைவிக்கு வங்கியின் சேமிப்பு கணக்கு உள்ளதா என்றால் அரசு மகளிர் உரிமைத்தொகை பெற மட்டும் கணக்கு உள்ளது. எனது மனைவியின் உரிமைத்தொகை பெறும் வங்கி கணக்கிலிருந்து தான் கடன் கொடுத்தேனா என்றால் இல்லை. கடனுறுதி சீட்டில் கைரேகை வாங்கவில்லை என்றால் சரிதான். கையெழுத்து மட்டும் தான் வாங்கினேன். கடனுறுதி சீட்டு வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றும், அதனால் தான் அதில் கைரேகை பெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் நான் சொல்லும் காலக்கட்டத்தில் எழுதவில்லை என்றும் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எனக்கு நான்கு லட்ச ரூபாய்கடன்கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என்றும், பிரதிவாதி கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன தேவைக்காக கடன் வாங்கினார் என்றால் போர்வேல் போடுவதற்காக கடன் வாங்கினார். அதை எவ்வாறு தெரிந்துகொண்டேன் என்றால் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். அதனால் தெரிந்து கொண்டேன். பிரதிவாதி போர்வேல் போட்டரா என்றால் போர்வேல் போட்டுவிட்டு வீட்டை விற்று விட்டார். பிரதிவாதிக்கும் எனக்கும் முன்

விரோதம் இருந்ததா என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்திற்காக கடனுறுதி சீட்டை தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எனக்கு பணம் வரவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நல்ல வேலையிலும், வசதி வாய்ப்பு உள்ளவராகவும் உள்ளார் என்றும் அதனால் அவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஒருபோதும் பணம் வாங்க வேண்டிய தேவையும் அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் கைரேகை வாங்கவில்லை என்பதால் அது குறைபாடுடைய ஆவணம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

தேதி.10.02.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.10/2020 திரு.செல்வராஜ், த/பெ.அம்மாசைக்கவுண்டர் வா.சா.2

<u>வா.சா.2: மனுவின் பேரில் மனுமதிக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டை நான் தான் எழுதினேன் என்றால் இல்லை. சாட்சி கையெழுத்து மட்டும் தான் செய்தேன். அதனால் வா.சா.ஆ.1ல் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியும். என்ன எழுதியுருந்தது என்றால் தற்போது நினைவில் இல்லை. ஏற்கனவே கடனுறுதி சீட்டில் ஸ்டாம்ப் ஒட்டிய பிறகு கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு எந்த இடத்தில் கையெழுத்து செய்தேன் என்றால் 15.03.2018ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு மேல் பழனிச்சாமியின் வீட்டில் கையெழுத்து செய்தேன். அப்போது நான் கையெழுத்து செய்யும்போது கடனுறுதி சீட்டு முழுமையாக எழுதவில்லை என்றால் அப்போது நான் பார்க்கவில்லை. அதனால் கடனுறுதி சீட்டில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.